விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | ஆனி: 21 | துல் ஹஃதா: பிறை: 11 | இதழ்: 156

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 05-07-1990

# யாழ். கோட்டைப் படையினர் சரணடையும்வரை முற்றுகை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். கோட்டை முற்றுகை இன்றுடன், இருபத்து மூன்று தினங்களாக நீடிக்கிறது. கோட்டைக்குள்ளிருக்கும் இராணுவத்தினரையும் பொலிஸாரையும்மீட்க ஹெலி, போர் விமானங்களின் உதவியுடன் ஆயுதப் படையினர் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்ட போதிலும், கோட்டைக்குள்ளிருக்கும் அரச படையினர் சரணடையும்வரை விடுதலைப்புலிகளின் முற்றுகைதொடர்ந்து நீடிக்கும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

## புலிகளின் முயற்சிபற்றி இராணுவ அதிகாரி

நிலைமை இவ்வாறிருக்க, கோட்டைக்குள் பிரவேசிக்க விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி இராணுவ அதிகாரி விபரம் வெளியிட்டுள்ளார்:

சுமார் 450 புலிப் போராளிகள் யாழ். கோட்டை முகாமை முற்றுகையிட்டுள்ளதாக, கோட்டை முகாம் லெப்டினன் ஜெயக்கொடி, யாழ். கோட்டைக்குள்ளிருந்து அறிவித்திருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

யாழ். கோட்டை முகாமை புலிகள் புல்டோசர் மூலம் தாக்கி உள்ளே வர முயற்சித்ததாகவும், மதில் சுவர்களில் கயிறுகள் கட்டி உள்ளே ஏற முயன்றதாகவும், தாங்கள் கைக்குண்டுகள் வீசி அம்முயற்சிகளை முறியடித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டைக்குள் இருக்கும் உணவும், மருந்தும், கட்டுப்பாட்டுடன் பாவித்து வருவதாகத் தெரிவித்துள்ள அவர் மூன்று நேரமும் பருப்பும் சோறும் சாப்பிட்டுவருவதாகவும், ஒரு மாதம் பசியுடன் இருந்து போராட படையினர்

(4ம் பக்கம் பார்க்க)

# படையினரின் மீட்பு பற்றிய உலகச் செய்திகள்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக முற்றுகையிடப்பட்டிருக்கும் கோட்டை முகாமுக்குள்ளிருந்து காயமடைந்த எட்டு அரசபடையினரை மீட்டு எடுத்துவிட்டது குறித்து இலங்கை அரசின் விமானப்படையின் துணிச்சலான மீட்பு பணி குறித்து முன்னுக்குப் பின் முரணான செய்திகள் இலங்கை வானொலியின் தமிழ் ஆங்கிலச் செய்திகளிலும் இந்திய, லண்டன், பி. பி. ஸி. செய்திகளிலும் நேற்று முதல் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இலங்கை வானொலியின் செவ்வாய் அதிகாலை தமிழ் செய்தியில், 17 படையினரை விமானப்படையினர் மீட்டு எடுத்துவிட்டதாக முதலில் அறிவிக்கப்பட்டது. அதே வானொலி மாலையில் இராணுவ வீரர்கள் சிலர் மீட்கப் பட்டுவிட்டதாக மாத்திரம் அறிவித்தது.

இதேவேளையில் அன்றைய இலங்கை வானொலியின் ஆங்கிலச் செய்தியோ (இரவு 8-45) இம் மீட்புப் பணியில் இரண்டு ஹெலிக்கப்டர்கள் பயன்படுத்தபபட்டதாகவும் அதில் ஒன்று கோட்டைக்கு அருகே தரையிறங்கியதாகவும் சக இராணுவத்தினரின் உதவியுடன் காயமடைந்தவர்கள்மீட்கப்பட்டதாகவும் அறிவித்தது.

இந்திய வானொலியோ தனது கொழும்பு நிருபரை ஆதாரம் காட்டி அரச உயர்அதிகாரிகளின் தகவலின்படி, இம் மீட்புப் பணியில், இரண்டு ஹெலிக்கப்டர்களும், ஜெட் விமானங்களும் பயன்படுத்தப்பட்டு வெற்றிகரமாக காரியத்தை சாதித்துவிட்டதாக அறிவித்தது.

லண்டன் பி. பி. ஸி. செய்தியின்படி, ஹெலிக்கப்டர் ஒன்று கோட்டைக்குள் இறங்கிக்கொண்டிருந்தபோது நான்கு விமானங்கள் கோட்டைப் பகுதிகளைச் சுற்றி குண்டுவீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும், - அவ்வேளையில் எட்டு படைவீரர்கள் அப்புறப்படுத்தப்பட்டு ஏனைய ஆட்களுக்கு அந்த இடத்திலேயே சிகிச்சை வழங்கப்பட்டதாகவும், விமானப்படை அதிகாரி தெரிவித்ததாக செய்தி ஒலிபரப்பியது.

இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அதே நேரத்தில் கோட்டை முகாமை அடுத்துள்ள பகுதிகளில் தூங்கிவழிந்த முகத்தோடு ஏங்கித் தவித்தவண்ணம் ஒதுங்கிப் பதுங்கிக் கிடந்த யாழ் நகரத்தின் மக்களுக்கோ நடந்துமுடிந்துவிட்டதாகக் கூறப்படும் நிகழ்வின் முழு உண்மையும் தெளிவாகத் தெரியாதுவிட்டாலும், அன்று அதிகாலை முதல் வெளிவந்துகொண்டிருந்த முன்னுக்குப் பின் முரணான இலங்கை அரசினதும், இந்திய வானொலியினதும், லண்டன் பி. பி. ஸி. செய்திகளினால் இம் மீட்புப் பணி உண்மையில் நிகழ்ந்திருக்கமுடியுமா என்று ஏற்கனவே ஏற்பட்டிருந்த சந்தேகம் மேலும், வலுவடையச் செய்துள்ளதே ஒழிய வேறு எதுவுமில்லை.

இத்தகைய சந்தேகத்தின் மத்தியில் தவிக்கும் மக்களுக்கு இம் மீட்புப் பணி குறித்து இலங்கை, இந்திய, லண்டன் வானொலிச் செய்திகளை அப்படியே தருகின்றோம்,

இலங்கை வானொலி காலை 6-30; "இலங்கை அரச விமானப்படையினர் இன்று அதிகாலை யாழ், கோட்டை முகாமிலிருந்து காயமடைந்த 17 படைவீரர்களை வெற்றிகரமாக மீட்டு சென்றுள்ளனர்".

அதே தினம் இலங்கை வானொலி மாலை 6-00; "இலங்கை இராணுவப்படையினர் துணிச்சலுடன் செயற்பட்டு படுகாயமடைந்திருந்த இராணுவ வீரர்கள் சிலரை மீட்டுள்ளனர்".

இலங்கை வானொலி ஆங்கிலச் செய்தி மாலை 8-45 "விமானப்படையினர் அதிகாலையில் மேற்கொண்ட துணிச்சலான மீட்புப்பணியில் படு காயமடைந்த ஏழு படைவீரர்களை வெற்றிகரமாக மீட்டுவந்துள்ளனர்.

ஒரு ஹெலிகப்டர் பாதுகாப்பு வழங்க மற்றுமொரு ஹெலிகாப்டர் கோட்டைக்கு வெளியே தரை இறங்கியது. சக இராணுவத்தினரின் உதவியுடன் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

# உலக நாடுகளுக்கு புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"நோயினாலும், காயங்களினாலும், பட்டினியாலும் சாவை எதிர்நோக்கியிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு உதவி வழங்கிவரும் நாடுகளோ அமைப்புகளோ அவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகவே வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்"

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரின் ஹெலி, பொம்மர் மற்றும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களினாலும் சிங்களக் குண்டர்களும் இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து தமிழ்பேசும் மக்களுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதல்களினாலும் இதுவரை 1000 ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன், வீடுகள், சொத்துக்களை இழந்ததுடன் காயத்துககுள்ளாகியும் 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உண்ண உணவோ உடுக்க உடையோ, இருக்க இடமோ இன்றியும் மருத்துவ சிகிச்சைக்கு வசதியோ இன்றி அவதியுற்றுக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடும் உணவுத் தட்

(4ம் பக்கம் பார்க்க)

# பொட்டலங்கள் போட்ட போர் விமானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமின் மேல் சுற்றிப் பறந்த இரு போர் விமானங்கள், வானத்திலிருந்து பல பொட்டலங்களை கீழே போடுவதை காணக் கூடியதாக இருந்தது.

மேற்படி இரு விமானங்களும் சரியாக பிற்பகல் 3-35-மணிக்கு வானத்தில் வட்டமிடும்போது, மக்கள் பயத்தினால் பதுங்குகுழிகளில் பதுங்கிக் கொண்டனர். ஆனால் விமானத்திலிருந்து கீழே போடப்பட்டவை வெடிச்சத்தத்தை ஏற்படுத்தாததினால் மக்கள் மனதில் சற்று நிம்மதி பிறந்தது.

இவ்விரு விமானங்களும், வானத்தில் 20 முறைகள் வட்டமிட்டு 19 பொட்டலங்களை ஒன்றன்பின் ஒன்றாக கீழே போட்டன. இந்தஇரு விமானங்களும் வழமைபோல் வானத்தில் சமநிலையில் பறக்காமல், பொட்டலங்களை கீழே போடும்போது 'பொம்பர்' விமானங்கள் போல் செ[illegible]தாகவே பறந்து வந்து பொட்டலங்களைப் போட்டன.

கடந்த பல நாட்களாக விமானங்களிலிருந்து கீழே போடப்பட்டவைகுண்டுகளாகவே இருந்தன. ஆனால் இம்முறை போடப்பட்ட அனைத்தும் வெடிச்சத்தத்தை ஏற்படுத்தாததினால் இவை உணவுப் பொருட்களாகவோ அல்லது மருந்து வகைகளாகவோ இருக்கலாமென கூறப்படுகிறது.

இப்பொட்டலங்கள் கோட்டைக்குள் விழுந்ததா என்பது பற்றி தெரியவில்லை. (வி)

மட்டக்களப்பில்

# இரண்டு லட்சம் அகதிகள் உணவின்றித் தவிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இடம் [illegible] பெற்ற இராணுவ நடவடிக்கை மற்றும் [illegible]களினால் சுமார் 2 லட்சம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். [illegible] மக்கள் அகதிகளாகத் தஞ்சம்

(4-ம் பக்கம் பார்க்க)

# "படையினர் மீட்பு' பச்சைப் பொய்!"

## விடுதலைப் புலிகள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்.கோட்டையிலிருந்து வெற்றிகரமாக காயமடைந்த படைவீரர்களை மீட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு மிகப் பெரிய பொய் ஒன்றை கூறி உள்ளது" என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:யாழ். கோட்டையில் காயமடைநத படையினரை அகற்ற நாம் மறுக்கின்றோம் என்றும், அகதிகளாக சென்றுள்ள மக்களுக்கு தாங்கள் நிவாரணம் வழங்குவதாகவும், தமிழ்பேசும் மக்களை தாங்கள் கொல்லவில்லை என்றும் சிங்கள அரசு பொய்கூறி வருகிறது.

கோட்டையின் எமது முற்றுகையை உடைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு ஸ்ரீலங்கா அரசு குண்டுவீசி நகரை அழித்து வருகின்ற அதேவேளை இனப்படுகொலைகளையும் அதிக அளவில் கிழக்கில் நடாத்திவருவதையும் சர்வதேசமும் அறியும்.

## காயமடைந்த சிங்களப் படையினர்

யாழ். கோட்டையில் காயமடைந்த சிங்களப் படையினரை அங்கிருந்து அகற்ற நாம் மறுத்து வருவதாக அரசு கூறிவருகிறது. காயமடைந்த படை வீரர்களை அங்கிருந்து எடுத்துச் சென்று வைத்தியம் செய்ய மனிதாபிமான அடிப்படையில் ஒத்துழைக்க நாம் எப்போதும் தயாராக இருக்கிறோம்.

கடந்தவாரம் இதுபற்றி எம்முடன் பேசிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் நாம் அவர்களை அங்கிருந்து எடுத்துச் சென்று வைத்தியம்செய்ய மனிதாபிமான அடிப்படையில் ஒத்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கொழும்பில் கைதானவர்களில் தலையாட்டி அடையாளம் காட்டியவர்களுக்கு அடி உதை

## விடுதலை பெற்று வந்த மாணவன் தகவல்

(யாழ்ப்பாணம்)

'கொழும்பில் கைதுசெய்யப்பட்ட தமிழர்களில், தலையாட்டிகள், அடையாளம் காட்டியவர்களை அரசப்படையினர் அடித்து உதைத்து வதைத்தார்கள்''

கொழும்பில் கைதாகி விசாரணையின் பின் விடுதலை பெற்று வந்த உயர் வகுப்பு மாணவர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து கடந்த சனிக்கிழமை பஸ்ஸில் யாழ். நகர் வந்து சேர்ந்த 300-க்கும் அதிகமான அகதிகளில் இந்த மாணவரும் ஒருவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த மாதம் 14-ம் திகதி வெளிநாட்டிலிருக்கும் எனது சகோதரனுடன் தொலைபேசியில் கதைப்பதற்காக நான் கொழும்பு சென்று, ஜிந்துப்பிட்டியில் உள்ள தனியார் விடுதியொன்றில் தங்கியிருந்தேன்.

### விடுதி சுற்றிவளைப்பு

16-ம் திகதி யாழ். நகரில் பிரச்சனை தொடங்கியதால் இங்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. 18-ம் திகதி பிற்பகல், பொலிஸாரும், இராணுவத்தினரும் எமது விடுதியைச் சுற்றிவளைத்து, கூடுதலாக இளைஞர்கள் அனைவரையும் கைது செய்து கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

### நூற்றுக்கணக்கில் இளைஞர்கள்

நான் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டபோது, நூற்றுக்கணக்கான இளைஞர்கள் முன்கூட்டியே அங்கு இருப்பதைக் கண்டேன்.

அன்று இரவு முழுவதும் பொலிஸ் நிலையத்திலேயே, நித்திரையின்றி கழித்தோம், இரவு சாப்பாடும் எமக்கு கிடைத்தது. மறுநாள் காலை 10 மணிக்குப் பின்பு எம்மை தனித்தனியாக விசாரணை செய்தார்கள். விசாரணையின்பின்பு இராணுவஉடையிலிருந்த ஆறு 'தலையாட்டி'கள் முன்பு நான் நிறுத்தப்பட்டேன். தலையாட்டிகள் யாரும் எனக்கெதிராக தலையாட்டாததினுல் நான் பின்பு விடுதலை செய்யப்பட்டேன்.

### தலையாட்டி முன்னுல்

என்னுடன் கைது செய்யப்பட்ட பல இளைஞர்களை 'தலையாட்டி' அடையாளம் காண்பித்ததினுல் கைது செய்யப்பட்டனர். தலையாட்டி அடையாளம் காண்பித்த பின்பே இளைஞர்களுக்கு அடி-உதை விழுவதைக் காணக்கூடியதாக இருந்தது! கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் ''மகரு'' இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக பின்பு அறிந்தேன்,

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்து, யாழ். நகர் வரமுடியாமல் கொழும்பில் ஹோட்டல்களில் தங்கியிருந்த பல தமிழ் இளைஞர்களும் தலையாட்டியின் செயலால் கைதுசெய்யப்பட்டனர். பொலிஸ் விசாரணையின் போது, ''வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்கு வந்துள்ளோம்''எனக் கூறிய பல இளைஞர்களை பொலிஸார் தாக்கியதையும் நான் கண்டேன்'' வெளிநாடுகளுக்குச்சென்று, எமது நாட்டைப் பற்றி பொய்ப்பிரசாரம்செய்வதற்காகவா செல்கின்றீர்கள்? என இளைஞர்களை நோக்கி பொலிஸார் கூறியபடி தாக்கினுர்கள்.

### கைதான இளைஞர்கள்

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை 'மகரு' சிறைச்சாலைக்கு கொண்டுசெல்வதற்கு புறக்கோட்டையில் இருந்த நாலு லொறிகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் உபயோகித்தனர். இந்த லொறிகள் மீண்டும் கொழும்புக்கு வந்த போது அவற்றில் இரத்தக்கறைகள் காணப்பட்டதாக கூறப்பட்டது.

யாழ். நகர் செல்ல விரும்புவோர் பம்பலப்பிட்டி மாணிக்க பிள்ளையார் கோவிலடிக்கு வரும்படி 29ம்திகதி அரசாங்கம் அறிவித்ததும் நான் அங்கு சென்றேன். அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் முன்கூட்டியே அங்கு இருப்பதை கண்டேன். அன்றிரவு எங்களுடைய பெயர் விபரங்கள் பதிவு செய்யப்பட்டன பின்பு அங்கு வந்த வவுனியா பாராளுமன்ற உறுப்பினரான திருமதி ராஜமனேகரி புலேந்திரன் எமது மத்தியில் சிறிய சொற்பொழிவாற்றினுர்.

நமது நிருபர்

**-தேவா-**

யாழ். நகர் செல்லும் நீங்கள் அங்கு அமைதியாக வாழ வேண்டும். அரசாங்கத்துக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டாம்', எனக் கூறினுர். அதன் பின்பு அங்கிருந்த ஆண்கள் அனைவருக்கும் ''சாரம்'' ஒன்றும் ரூபா100வழங்கப்பட்டது. பெண்களுக்கு ஒரு'லக்ஸ்பிறே' பால்மா பெட்டி மட்டும் இலவசமாக வழங்கப்பட்டது.

### யாழ்- நகர் நோக்கிப் பயணம்

30ம் திகதி காலை 6 மணிக்கு 12 லொறிகளிலும், 6 தனியார் வாகனங்களிலும் இராணுவ-பொலிஸ் பாதுகாப்புடன் யாழ். நகர் நோக்கிப் புறப்பட்டோம்.

தனியார் வாகனங்களில் பிரயாணம் செய்தவர்கள் அனைவரும் 150 ரூபா வீதம் செலுத்தினுர்கள். லொறிகளில் பிரயாணம் செய்தவர்களிடம் பணம் எதுவும் அறவிடப்படவில்லை. எமக்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸ்-இராணுவ வாகனங்களின் மத்தியில் திருமதி ராஜமனேகரி புலேந்திரனும். சில பெண்களும் பயணஞ்செய்யும் வாகனமும் காணப்பட்டது.

கொழும்பில் இருந்து புறப்பட்ட எமது வாகனங்கள், நீர்கொழும்பு, புத்தளம், அநுராதபுரம் போன்ற இடங்களில் ஒய்வு எடுப்பதற்காகத் தரித்து நிற்கும்போது எம்மை அறியாமல் எமது மனதில் ஒரு வித ''பயம்'' ஏற்பட்டவண்ணமே இருந்தது. ஆனுல் நாம் பயப்பட்ட அளவுக்கு எதுவித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. அனுராதபுரத்தைக் கடக்கும் போதுதான் ஓரிரு இடங்களில் மக்கள் கூட்டம் எமது வாகனங்களைப் பார்த்துக் கூக்குரல் இடுவதைக் கேட்கக்கூடிய இருந்தது.

நாம் மதவாச்சி ஊடாக, செட்டிகுளத்துக்குச் சிலமைல்கள் முன்பாகவுள்ள ஐக்காவில் இராணுவ முகாமை மாலை 9-45 மணியளவில் சென்றடைந்தோம். அங்கு எமது வாகனங்கள் இராணுவத்தினரால் கடுமையாகச் சோதனையிடப்பட்டது. அப்போது நான் பிரயாணம் செய்த தனியார் வாகனமும் மூன்று லொறிகளும் மட்டுமே அவ்விடத்தில் காணக்கூடியதாக இருந்தது.

எமது வாகனங்களைச் சோதனையிட்ட பின்பு இராணுவத்தினர் வாகன சாரதிகளைப் பார்த்து ''யாழ்ப்பாண நகரிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, மீண்டும் கொழும்புக்கு யாரும் வரக்கூடாது, ''எனக் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பினுர்கள். கொழும்பிலிருந்து எமக்கு பாதுகாப்பாக வந்த இராணுவ - பொலிஸ் வாகனங்களும், திருமதி ராஜமனேகரி புலேந்திரனின் வாகனமும் திரும்பிச் செல்வதை நான் பார்த்தேன்.

### விடுதலைப் புலிகள் பாதுகாப்பு

எமது வாகனங்கள் செட்டிகுளத்தை அடைந்ததும், விடுதலைப் புலிகளின் வாகனங்கள் எமக்கு பாதுகாப்பு அளித்து, எம்மை மடுத்தேவாலயத்தில் தங்க வைத்தனர்.

தேவாலய சுற்றுடல் சனநடமாட்டமின்றி காணப்பட்டபோதிலும், தேவாலயத்துக்கு அருகாமையில் இருந்து இரு கடைகளிலும், எமக்கு வேண்டிய இரவு உணவுகள் கிடைத்தன. மறுநாள் ஜுலை 1ம் தேதி அதிகாலை 4 மணியளவில் எமது வாகனங்கள், சங்குப்பிட்டியை நோக்கிப் புறப்பட்டன.

சங்குப்பிட்டியை நாங்கள் பகல் பத்து மணியளவில் வந்தடைந்தபோது கொழும்பிலிருந்து எம்முடன் புறப்பட்ட சில வாகனங்களையும் லொறிகளையும் அங்கு கண்டேன். இந்த வாகனங்களின் சாரதிகள் சிலரை ஐக்காவில் இராணுவத்தினர் தாக்கியதாக அறிந்தேன். பகல் 12 மணியளவில் யாழ். நகரை வந்தடைந்ததும் திகில் நிறைந்த என்பயணம் முடிவடைந்தது. (வி)

## மக்கள் இடம்பெயர்வு

(புங்குடுதீவு)

காரைநகர் ஷெல் தாக்குதல்களினுல் அப்பகுதிகளிலிலுள்ளவர்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து புங்குடுதீவு பகுதியில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

மேற்படி அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள சுமார் ஐம்பத்தைந்து குடும்பங்களுக்கு புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய உதவி பங்குத்தந்தை அருள் நீக்கிலஸ் குறூஸ் அடிகளால் நிவாரணப் பொருட்கள் சவேரியார் ஆலயத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டது.

## இப்படியும் நடக்கிறது

வெகுஜன தொடர்பு சாதனங்களின் பணி, சில சந்தர்ப்பங்களில் அதிமுக்கியத்துவம் பெற்று விடுகிறது.

இத்தொடர்பு சாதனங்களில் வானெலி, தொலைக்காட்சி ஆகியவை முக்கிய இடம்பெற்றுலும் அவசிய-அவசரமான நேரங்களில் காலைவாரிவிடுவதும் உண்டு.

ஆனுல் பத்திரிகைகளின் பங்கு அப்படி அல்ல. அச்சுவாகனம் ஏறிவரும் பத்திரிகைகளுக்கு என்றுமே ஒரு மக்கள் பங்களிப்பு இருக்கிறது. அதாவது அனுவசியமாக உண்மைக்குப் புறம்பாக எழுத்துக்கள் இடம்பெறுவது மிக மிகக்குறைவு. காரணம்; பத்திரிகைகள் 'சாகாவரம்' பெற்றவை! இன்றைய பத்திரிகையை எத்தனை ஆண்டுகள் ஆனுலும் பாதுகாத்து வைத்திருந்து மீண்டும் மீண்டும் பார்க்கலாம். படிக்கலாம். ஆனுல் வானெலி, தொலைக்காட்சி சேவை கண்ணுக்கும், காதுக்கும் விருந்தே தவிர அவற்றை என்றும் பாதுகாத்து நினைவில் வைத்திருக்க முடியாது! இவை 'காற்றில் வரும் கீதங்கள்' மாதிரித்தான்!

ஏன் இந்தச் சுற்றி வளைப்பு என்று நீங்கள் கேட்கலாம். விஷயம் இல்லாமல் உங்கள் காதில் 'பூ' வைக்க நாம் விரும்பவில்லை. யுத்தமொன்று இன்று வடக்கு - கிழக்கில் நடந்துகொண்டிருக்கிறது. அழிவுகள் சொல்லில் அடங்காது. ஆனுல் இலங்கை வானெலியிலும் தொலைக்காட்சியிலும் மற்றும் இந்திய வானெலியிலும் வரும் செய்திகளைக் கேட்கும்போது சிரிப்பு வருகிறது.

சில தினங்களுக்கு முன்னர் இந்திய வானெலியில் வெளிவந்த செய்தி எமக்கு மட்டும் ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. வெளிஉலகில் இச் செய்தியைக்கேட்ட அனைவருக்குமே அதிர்ச்சியை அளித்திருக்கும்!

''யாழ் கோட்டையிலுள்ள இலங்கை இராணுவம் அங்கிருந்து வெளியேறி ஆயிரம் மீற்றர் தூரத்துக்கு வந்துவிட்டார்கள்'' என்று இந்திய வானெலி செய்தி வெளியிட்டிருந்தது!

''மட்டக்களப்பை இராணுவத்தினர் கைப்பற்றி விட்டனர்' என்று முதல்நாள் செய்திவரும் அடுத்த நாள்; ''கிரானிலிருந்து மட்டக்களப்பை நோக்கி இலங்கை இராணுவத்தினர் நகர்நது கொண்டிருக்கின்றனர்'' என்று வானெலிச் செய்தி கூறும்.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாக இயங்காவிட்டால் இப்படியான செய்திகள்தான் வானெலியிலும், தொலைக்காட்சியிலும் வரும் அதனைக் கேட்பது நம் தலைவிதி.

'ஊடுருவி'

## கொடிகாமத்தில் அகதிகள் தஞ்சம்

(நாவற்குழி)

வலிகாமம் பகுதியிலிருந்தும் திருகோணமலைப் பகுதியிலிருந்தும் சுமார் 10 ஆயிரம் அகதிகள் கொடிகாமம் பகுதியில் ஆங்காங்கே தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளைச் செய்வதில் கொடிகாமம் பிரதேசச் சிற்றூரவையினர் மிகவும் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். இந்த அகதிகள் முகாம்களை கொடிகாமம் வட்டாரப் பொறுப்பாளர் திரு.ராகுலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் சிற்றூரவையினரை ஈடுபடுத்தியுள்ளார்.

### தேவாலயத்தில்

சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள றே. க. தேவாலயத்தில் கரையூர், பாஷையூர், திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலிருந்து சுமார் 180 குடும்பங்கள் அகதிகளாக வந்து தஞ்சமடைந்துள்ளனர், அவர்களுக்கான உதவிகளை அத் தேவாலயத்தின் வணக்கத்திற்குரிய பிதா செய்து வருகின்றுர்.

### நாவற்குழியில்

கரையூர், பாஷையூர் பகுதிகளை விட்டு இடம்பெயர்ந்து வந்த சுமார் 40 குடும்பங்கள் கைதடி, நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர். [107]

## பொம்மர் கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பகுதியில் நேற்று அதிகாலை இரு பொம்மர் விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

## அகதி முகாமில் தஞ்சமடைந்த 8560 குடும்பங்களுக்கு

### ஒருவாரகால உணவுப் பொருள்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடுகளை விட்டுவெளியேறிய அகதி முகாம்களில் தஞ்சம்புகுந்துள்ள 8560 குடும்பங்களுக்கு சமூகசேவைத்திணைக்களம் ஒரு வாரகால உலர் உணவுப் பொருட்களை வழங்கவுள்ளதாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் [illegible] தெரிவித்துள்ளார்.

இவர்களில் இருநூற்றி எழுபது பேர் நமசிவாய மகாவித்தியாலயத்திலும் கதீஜா கடினயா பள்ளியிலும், நூற்றி ஐந்துபேர் நாவலர் பாடசாலை, வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும். நாநூற்றி ஐம்பது பேர் புனித. சூசையப்பர் ஆலயம், கொழும்புத்துறை மகாவித்தியாலயம் இலந்தைக்குளம் சனசமூக வித்தியாலயத்திலும், துரையப்பா மகாவித்தியாலயத்திலும் பதின்மூவாயிரத்து முன்னூற்றிப் பதின்நாலுபேர் ஒஸ்மானியா கல்லூரி, கதீஜா மகளிர் கல்லூரியிலும் அந்தோனியார் ஆலயம், கல்யாண மண்டபத்தில் இரண்டாயிரத்துப் பத்துப்பேரும், சென் பற்றிக்ஸ் சென். சாள்ஸ் கல்லூரிகளில் பதினுலாயிரத்தி நானூற்றி எண்பது பேரும், ஆறுயிரத்து நானூறு பேர் மற்றைய முகாம்களிலும் உள்ளனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டு நிலைமை அங்கும் இங்கும்

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலுக்கும், பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினாலும் அதிர்ச்சியடைந்த பெண்ஒருவர் மரணமானார். சுன்னாகத்தை சேர்ந்த எஸ். அன்னபூரணம்(35வயது) என்பவரே மரணமானவராவர்.

## கொழும்பு தமிழர்கள்

கொழும்பில் கைதான சுமார் 3000 தமிழர்கள் குறித்து ஒருமாதத்திற்கு எதுவும் கூறமுடியாது என்று கைதானவர்களின் உறவினர்களுக்கு படையினர் தெரிவித்துள்ளனராம்.

## பீரங்கி தாக்குதல்

பருத்தித்துறையில் கடந்த சனிக்கிழமை காலை பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அரைமணிநேரம் இத்தாக்குதல் நீடித்தது.

## மக்கள் பீதி

வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, தாளையடி பகுதியிலும் கடற்படையினரின் பீரங்கி குண்டுகள் விழுந்து வெடித்ததால், மக்கள் பீதியடைந்துள்ளனர்.

## இருவர் பலி

வவுனியா பூந்தோட்டப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வீடுகளைப் பார்க்கச் சென்றபோது அவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் பலியானார்கள்.

## பொம்மர் நோட்டம்

புங்குடுதீவில் கேரதீவுப் பகுதியைக் கடந்த வெள்ளிக்கிழமை பொம்மர் விமானம் ஒன்று நோட்டம் விட்டது.

## கொழும்பில் அகதிகள் முகாம்

கொழும்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகதி முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் 500 தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.

## பலாலியில் மோதல்

பலாலி விளங்காவத்தையில் கடந்த திங்கள் அரச படையினருக்கும், புலிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. புலிகளின் தாக்குதலினால் படையினர் முகாமுக்குப் பின் வாங்கிச் சென்றனர்.

## பங்கீட்டு முறையில்

பருத்தித்துறையில் பிரபல வர்த்தக நிலையம் ஒன்று பொருட்களைக் கையிருப்பில் வைத்துக்கொண்டு விற்க மறுத்த காரணத்தினால் மூடிச்சீல் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. கடையிலிருந்து பொருட்கள் வெளியில் எடுக்கப்பட்டு பங்கீட்டுமுறையில் வழங்கப்பட்டது.

## துப்பாக்கிச் சூடு

வடபகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு முல்லைத்தீவில் வைத்துப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## இராணுவம் விரட்டியது

வவுனியா நகரில் உள்ள அரச உணவுக் களஞ்சியத்தில் உணவுப் பொருள் எடுக்கச் சென்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை இராணுவம் விரட்டி அடித்தது.

## காரியாலயம் இடமாற்றம்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகம் யாழ் ஸ்ரான்லி வீதியிலிருந்து நீர்வேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## அகதிகள் தஞ்சம்

பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாசிரமத்தில் மயிலிட்டி, பலாலிப் பகுதிகளை சேர்ந்த அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

## மாந்தீவுக்கு படைகள்

மட்டக்களப்பில் மாந்தீவுக்கும் அரசபடைகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

## தாய்மார் ஊர்வலம்

இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்களை விடுவிக்கக்கோரி, கல்முனை நகரில் தாய்மார்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

## 1000 ரூபா முற்பணம்

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்துள்ள அரச ஊழியர்களுக்கு ஆயிரம்ரூபாமுற்பணம் வழங்கப்படுகிறது. அவர் தொழில்பார்க்கும் திணைக்களத்தின் யாழ் பிரிவு கிளை அதிகாரியின் சிபார்சுடன் அரச அதிபரை சந்தித்தால் இப்பணத்தை பெறலாம் என்று கூறப்படுகிறது.

## கிளிநொச்சியில் மோதல்

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் பரவிப்பாஞ்சான் ஊடாக வெளியேற முற்பட்ட போது விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் மோதல் ஏற்பட்டது இதனை தொடர்ந்து முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றது.

## 2 மணி நேரம் மூடப்படும்

ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னால் உள்ள கண்டி வீதி நண்பகல் 12 மணிமுதல் 2 மணிவரை வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் நண்பகல் போசனத்திற்கே இந்த ஏற்பாடு எனக் கூறப்படுகிறது.

## உணவுப்பொருள் இல்லை

மன்னாரில் மக்கள், உணவுப் பொருள் மற்றும் மண்ணெண்ணை பெறமுடியாமல் கஷ்டப்பட்டு வருகிறார்கள். கடைகள் யாவும் பூட்டப்பட்டுள்ளது.

---

# சமாதானத்திற்கு தீக்குளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவவேண்டி கொழும்புத்துறை மேற்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவத்தில் அடியார்கள் தீக்குளிப்புச் செய்தனர். ஆலய பூசகர் திரு. எஸ். தில்லைநாதன் ஆலய உற்சவத்தை நடாத்திவைத்தார்.

(54)

---

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலி மலையாளங்காடு ஐயனார் கோவில் சங்காபிஷேகம் எதிர்வரும் 13ம் திகதி நண்பகல் நடைபெறவுள்ளது. மகேஸ்வர பூசையும் இரவு எம்பெருமானுக்கும் தேவியருக்கும் திருக்கலியாணமும் திருவூஞ்சலும் நடைபெறும்.

(54)

---

## அகதிமுகாமில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாமாக யாழ்ப்பாணஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகள் முகாமில் இருப்போர் எண்ணிக்கை 45954 பேர் ஆகும்.

---

# இன்றைய பார்வையில் யாழ். நகர்

அழகாபுரிஎன்றுஅன்றுவர்ணிக்கபட்டயாழ். நகரம்அவ்ரோ' விமான தாக்குதலினால் அழகிழந்து, உருக்குலைந்து சுடுகாடு போல இன்று காட்சியளிக்கிறது. பொம்மர் தாக்குதலினால் பொலிவிழந்தபூமியாக மாறிவிட்டது.

இரவுபகலாக இடைவிடாது மக்கள் நடமாடிய கோட்டைப் பகுதி இன்று கொக்கு குருவி காக்கைகளைக்கூட காணமுடியாத பாலைவனமாக மாறிவிட்டது.

## ஆயிரமாயிரம் வாகனங்கள்

ஆயிரமாயிரம் வாகனங்கள் அல்லும் பகலும் நிரம்பி வழிந்த ஆஸ்பத்திரி வீதி. பல்லாயிரக்கணக்கான பயணிகள் தினமும் வந்து செல்லும் யாழ் பஸ் நிலையம், நல்லூர் திருவிழா முதல், தீபாவளி வரை தினமும் மக்கள் வெள்ளத்தால் அலைமோதும் பெரியகடை, தினம் தினம் நிரம்பிவழியும் திரையரங்குகள், திக்கெட்டுமிருந்து வரும் மக்கள் தங்களுக்கு தேவையான வற்றை வாங்கிச் செல்லும் கடைத்தெருக்கள் எதுவுமே இன்று நகரில் இல்லை.

ஆயிரம் ஆயிரம் நோயாளிகளைச் காப்பாற்றிய யாழ். ஆஸ்பத்திரி கூட பாதிப்பானது. அதிகாலை கியூவில் முன்னிடம் பிடிக்க வந்து சேரும் நோயாளிகள் விடியுமுன்னரே, வெளிநோயாளர் பகுதிக்கு வந்துசேரும் மக்கள் வெளியூர் செல்ல, தனியார் பஸ்களில இருந்துசெல்ல இடம்பிடிக்க வந்துசேரும் பயணிகள் எவருமேயில்லாது வெறிச்சோடிக் கிடக்கிறது யாழ். நகரம்.

## பொம்மர் தாக்குதல்

பொம்மர் தாக்குதலினால் பொலிவிழந்து; ஷெல் அடியினால் சீரழிந்து: 'அவ்ரோ' தாக்குதலினால்அழகிழந்து, ஹெலி தாக்குதலினால் கெட்டழிந்து விட்டது யாழ். நகரம்.

நகரை இனிக் கட்டி எழுப்புவதென்றால் இலகுவான செயலல்ல. எட்டுப் பத்து வருடம் எடுத்தாலும் இனி வருமா அந்த யாழ். நகரம் என்று ஏங்கித் தவிக்கிறார்கள் தமிழ் பேசும் மக்கள்.

குண்டுவீச்சினால் கண்டபடி கட்டடங்கள், இடிந்துவிழுந்து கற்கள் வீதியில் சிதறிக் கிடக்க ஷெல் அடியினால் மின் கம்பங்கள் முறிந்துவிழுந்து, கம்பிகள் தொங்கி அங்குமிங்குமாக விழுந்து கிடக்க, தந்திக் கம்பிகள் ஹெலி தாக்குதலினால் அறுந்து அந்தரத்தில் தொங்க நகரமே சீர்குலைந்து சின்னபின்னமாகிவிட்டது.

## கோரக் காட்சிகள்

கோட்டைக்கு படையினர் வந்துகுடியேறிய நாட்கள்முதலிந்தககோரக் காட்சிகள், கொடுமைகள் நிலைபெற ஆரம்பித்தன.

போர்விமானத் தாக்குதலினால் நகரில் தரைமட்டமான வீடுகள் வர்த்தக நிலையங்கள் அநேகம். பூசைகள் நிறுத்தப்பட்ட ஆலயங்கள் மூடப்பட்ட கல்லூரிகள் மக்கள் நடமாட்டம் முற்றாக ஒழிந்த வீதிகள் ஏராளம்.

## வாழ்ந்த வீடுகளை

காலம் காலமாக பிறந்து வளர்ந்து ஓடியாடி விளையாடி வாழ்ந்த வீடுகளை, வளவுகளை விட்டு வெளியேறி சொந்த மண்ணிலே அகதிகளாகிய குடும்பங்கள் ஆயிரம் ஆயிரம்.

கொட்டடி முதல் குருநகர் வரை மக்கள் விட்டுச்சென்ற வீடுகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. கோட்டையை சுற்றிஆயிரம் மீற்றர்வரை குடிசனம் வெகுவாக குறைந்து விட்டது. முனீஸ்வரன் வீதி முதல் முட்டாஸ்கடை சந்தி வரை எங்குமே மனிதநடமாட்டம் கிடையாதுமுதலாம் குறுக்குத்தெரு முதல் 3ம் குறுக்குத்தெருவரை குண்டு வீச்சினால் மக்கள் குடிபெயர்ந்துள்ளனர்.

மத்திய கல்லூரி, மகளிர் கல்லூரிகள், மற்றும் பல கல்லூரிகள் அத்தனையும் சேதம் அனைத்துக் கல்லூரிகளும் மூடப்பட்டுள்ள.

## ஆஸ்பத்திரி ஸ்தம்பிதம்

யாழ் ஆஸ்பத்திரி முற்றாக ஸ்தம்பிதம். கச்சேரி காரியாலயங்கள் எதுவும் இயங்கவில்லை. சில ஊழியர்கள் வந்து போகிறார்கள். நிவாரண வேலைகள் நடைபெறுகிறது.

ஜுன் 25 காலையும், 29ம் தேதிமாலையும்,ஜுலை 2ம்தேதி நாள்முழுவதும் நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சினால், நகரமே சீரழிந்து விட்டது. இதுதானா யாழ் நகரம்? என்று ஏங்கித்தவிக்கும் அளவிற்கு உருக்குலைந்துவிட்டது. ஒன்றா இரண்டா 200 தடவைக்கு மேல் குண்டுவீச்சு நடந்தது.

வங்கிகள் சில திறந்திருந்தும் வாடிக்கையாளர் வருவதில்லை பல நோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் சில திறந்துள்ளன பாவனையாளர் வருவதில்லை.

## மின்சாரம் இல்லை

நகரில் சில பகுதிக்கு மின் சாரம் இல்லை. குண்டு வீச்சினால் மின் கம்பிகள் அறுந்து விடுகிறது. வீதி வெளிச்சம் மட்டுமல்ல, வீட்டு வெளிச்சமும், மாலை 6 மணியுடன் அற்றுப் போய்விடும். அதன்பின் யாழ். நகரமே இருளில் மூழ்கிவிடும் விமானத் தாக்குதலில் தப்ப இது ஒருவழி.

தட்டாதெருசந்தி, மாம் பழம்சந்தி, முத்திரைச் சந்தியில் தனியார் வாகனங்களை காணலாம். அதற்கு அப்பால் நகருக்குள் எந்த வாகனமும் வருவதில்லை,

## மூடப்பட்ட வீதி

வைத்தீஸ்வரா சந்தியிலிருந்து நகர்நோக்கி செல்லும் மானிப்பாய் வீதி மூடப்பட்டு விட்டது. அவ்வீதி மூடப்பட்டுள்ளதாக அறிவிப்பும் போடப்பட்டுள்ளது. வண்டி, வாகனம் எதுவுமே செல்லத்தடை. நகரில் சகல வீதிகளிலும், சனநடமாட்டமே இல்லை,

போராளிகளை மட்டும் வீதிகளில் ஒருவர் இருவராக,நடமாடுகிறார்கள். உடைந்து அழிந்து போன வர்த்தக நிலையங்களுக்கு, பகலிரவாக அவர்கள்தான் பாதுகாப்பு.

குருநகர் முதல் கொழும்புத்துறைவரை, ஆரியகுளம் முதல் அத்தியடிவரை, மக்கள் இடம்பெயர்ந்து விட்டார்கள். கொட்டடி, பண்ணை, நாவாந்துறை, முஸ்லிம் பகுதிமக்களும், அகதிகளாக வெளியேறி விட்டார்கள்.

கல்லியங்காடு, திருநெல்வேலி சந்தைகளுக்கே நகர மக்கள் சென்று உணவு பொருட்கள், காய்கறிகளை வாங்கி வருகிறார்கள். பெரியகடை, சின்னக்கடையெல்லாம் மூடப்பட்டுள்ளது.

மா, சீனி, மண்ணெண்ணை மருந்துக்கும் கிடையாது. தேங்காய்க்கு தட்டுப்பாடு. தேடினாலும் கிடைக்காது. முட்டை விலை உச்சத்திற்கு ஏறிவிட்டது. தீன் இல்லாமல் முட்டையிடும் கோழிகளையே முழுதாக விற்கிறார்கள்.

ஆடுமாடுகள் கூட அரைப் பட்டினி. தவிடு பிண்ணாக்கு எவரிடமும் இல்லை. சர்க்கரை மெழுகுதிரி, தீப்பெட்டி பனங்கட்டி எதுவுமே கிடையாது. வெளியூரிலிருந்து நகருக்கு வந்தால் திரும்பிச் செல்வது கஷ்டம். போக்குவரத்து எதுவுமே இல்லை. சைக்கிளில் வருபவர்கள் பொம்மர் சத்தம் கேட்டதுமே, திக்குதிசை தெரியாது தப்பிச் செல்ல வழி தெரியாது தடுக்கி விழுந்து தவித்து துடிக்கும் காட்சியை தினமும் காணலாம்.

இறைச்சி, மீன்கள் எதுவுமே கிடையாது, ஒருசில சிறுகடைகளில் பிஸ்கட்பக்கட் மட்டுமே விற்பனைக்கு இருக்கிறது, அரிசி, றவ்வை, பயறு, உழுந்து எதுவுமே இல்லை. குளிர் பானங்கள், கொழும்புச் சோடா கண்களில் படவே இல்லை.

தட்டாதெருச் சந்தியில் சில மருந்துக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் வசதிக்காக செயல்படுகின்றன.

## ஊழியரின் உதவி

பெரியகடை பகுதிக்குள் எவருமே செல்ல முடியாது. இடிபாடான கடைகளுக்குள் மிகுதிப் பொருட்களை மீட்க செல்வதானால் அத்தாட்சி காட்ட வேண்டும். ஆள் அடையாளம் தெரிய வேண்டும் கடைமுதலாளிகள், முகாமையாளர்கள் காண்பது அரிது. வாரக்கணக்கில் பாதுகாப்பு தேடி வெளியூர் சென்றுவிட்டார்கள். ஊழியர்களே வந்து குண்டு வீச்சு மத்தியிலும், உயிரைபணயம் வைத்து பொருட்களை மீட்டு செல்கிறார்கள் செயல் இழந்துவரும் கோட்டை முகாமிலிருந்து ஷெல் வீச்சு குறைவு அதனால் கடைகளில் மிச்சப் பொருள் மீட்கப்படுகிறது.

## யாழ். நகர் யுத்தகளம்

''யுத்தகளமான யாழ். நகரில் நித்தமும் மக்கள் பயப் பீதியுடன் வாழ்கிறார்கள். பஞ்சம், பசி, பட்டினியை எதிர்நோக்கியுள்ளார்கள் தேவையான உணவுப் பொருள்களை தேடிவைக்க முடியாத நிலைமை. அதற்குத் தட்டுப்பாடே காரணம். தின்னக் குடிக்க வழியில்லாமல் தெருவில் திரிகின்றனர். அன்ன ஆகாரமில்லாமல் அவஸ்தைப்படுகின்றனர். பறக்கும் பொம்பர் சத்தம்கேட்டுப் பதுங்கிக் கொள்கின்றனர். அதை மறக்கமுடியாமல் தமது மனத்தை விடுகின்றனர். சீனிவிலை யேறிறதால் தேநீரும் போச்சு. மாலை விளக்கும், மண்ணெண்ணையும் மருந்து போலாச்சு. வேலையும்போச்சு பலர் வீடு காடு ஆச்சு. மனைவி மக்கள் ஓயாதழுகின்றனர். சிலர் புத்தியாக ஓடித் தப்ப முயலுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு; நிரந்தர பாதுகாப்பு கிடைக்கும் வரை யுத்த நிலைமை நீடிக்கும். அதற்கேற்றவாறு மக்கள் வாழப் பழகிக் கொள்வது அவசியம்.

- ஈழநாதன் -

---

# காசோலையாக சம்பளம்; அரச ஊழியர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதியில் கடமையாற்றும் அரசாங்க ஊழியருக்குதற்பொழுதுவழங்கப்பட்டுவரும் சம்பளம் காசோலையாகவே வழங்கப்பட்டு வருகின்றது.

இக்காசோலையை மாற்றுவதற்கு தனியார் வர்த்தக நிலையங்களோ, கூட்டுறவு கிராமிய வங்கிகளோ, கூட்டுறவு விற்பனவு நிலையங்களோ தயக்கம் காட்டுவதாகத் தெரிகிறது.

இதனால் அரசு ஊழியர்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்குவதற்கும் இதர பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் பெரிதும் சிரமப்படுகின்றனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பி. பி. ஸி. கண்ணோட்டம்:

# "நினைத்ததைச் சாதிக்க இந்தியா மறைமுகமாகத் தலையிடலாம்"

(லண்டன்)

"வடக்கு-கிழக்கில் நடந்துவரும் போர் இறுதிவரை நடக்கும் போர் என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்றும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன சூளுரைத்துள்ளார் என்று லண்டன் பி. பி. ஸி. நிருபர் கிறிஸ்நட்டால் தெரிவித்துள்ளார்.

திரு. கிறிஸ்நட்டால் தனது நாளாந்த கருத்துரை கண்ணோட்டத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகின்றன. யாழ். கோட்டை முகாம் முற்றுகை தொடர்ந்து மூன்றாவது வாரமாக நீடித்துவருகிறது. இலங்கை அரச விமானப்படை குண்டுவீச்சுக்கள், கோரத்தனமாக கோட்டைய சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்று வருவதால் பல நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்பதிலும் பார்க்க முற்றாக அழிக்கப்பட்டுள்ளன எனலாம்.

இடைவிடாத குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வந்தாலும், சிறைப் பிடிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை விடுவிக்கும் அறிகுறிகள் இன்றுவரை தென்படவில்லை!

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டுவருதால் ஆகாய மார்க்கமாகவோ, தரைமார்க்கமாகவோ சிறைப்பட்டுக் கிடக்கும் இலங்கை இராணுவ பொலிஸ் படையினர்க்குரிய உணவு மருந்து வேறு எந்த வித உதவியும் வழங்கப்பட்டதாக தெரியவில்லை.

இத்தகைய இக்கட்டான நிலையில் கோட்டை முகாமுக்கான நீர் விநியோகமும் துண்டிக்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

விமானப்படைகளின் கோரத்தனமான குண்டுவீச்சினால் நீர்விநியோகக் குழாய்கள் பலத்த சேதமாக்கப்பட்டு பாதிக்கபபட்டதாகவும் கூறப்படுகிறது. இதே வேளையில் விடுதலைப் புலிகள் திட்டமிட்டு இந்த நீர்விநியோகத்தை துண்டித்துவிட்டதாக அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்.

எது எவ்வாறாயினும் கோட்டை முகாம் முற்றுகை கடந்த மூன்று வாரகாலமாக விடுதலைப்புலிகளினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது இலங்கை அரசின் விமானப்படையின் இடைவிடாத குண்டுவீச்சுத் தாக்குதல்களிலிருந்து ஊர்ஜிதமாகி வருகிறது.

இதே வேளையில் மன்னாரிலும் வவுனியாவிலும் இராணுவம் தொடர்ந்து தாக்குதல்களை நடாத்தி வருவதாகவும் கிளிநொச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டில் விமானப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாகவும், அமைச்சர் ரஞ்சன் தாமாகவே தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் அரசுப் படைகள் நச்சுவாயுக் குண்டுகளை (நேபாம்) போட்டதாகவும், இதனால் பல கட்டிடங்களும், காடுகளும், தீக்கிரையாக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டி உள்ளனர்.

இது புலிகளின் திட்டமிட்ட பிரசாரம் என்று அரச தரப்பில் கூறப்பட்டாலும் ஏதோ ஒரு வகையான தீ யூட்டும் நச்சுக் குண்டுகளை விமானங்கள் வீசியுள்ளது உண்மை என்று பக்கச் சார்பற்ற செய்திகள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

இக்குண்டு வீச்சுக்களினால் யாழ்ப்பாணப் பட்டினம் என்றுமில்லாதவாறு அழித்தொழிக்கப்பட்டுள்ளதாகவும், பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும், பல லட்சக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை விட்டு ஓடிவிட்டதாகவும் அறியப்படுகிறது.

இலங்கை அரசு ஒரு பக்கத்தில், அனைத்துக் கட்சிகளின் மாநாட்டை நடாத்தி உலக நாடுகளுக்குத் தனது நிலைப்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிக்கும் அதே வேளையில் மறு பக்கத்தில் திரு. ஸ்ரான்லி திலகரத்னவை புதுடில்லிக்கு அனுப்பி இந்தியத் தலைமைப் பீடத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கையில் உருவாகியுள்ள நிலைமை குறித்து, தென்கிழக்காசிய நாடுகளுக்கு விளக்கும் பொருட்டு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று இந்நாடுகளுக்கு விரைவில் விஜயம் ஒன்று மேற்கொள்ளவுள்ளது என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

மறுபுறத்தில், இலங்கை அரசின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன இந்தியா உட்பட எந்த ஒரு நாடும் இலங்கை அரசை போர் நிறுத்தம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

இத்தகைய நிலையில் இலங்கை அரசின் சார்பில் புதுடில்லியில் இந்திய அரசுத் தலைவர்களுடன் திரு. பேர்னாட் திலகரத்ன பேச்சுவார்த்தை நடாத்திவருவது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தப் பிரச்சனையில் இந்தியா தலையீடு செய்வதைத் தடுக்க இலங்கை விரும்புகிறது. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையில், இந்தியா தலையிடமாட்டாது என்று வெளிப்படையாகக் கூறியுள்ளபோதிலும், விடுதலைப் புலிகளையோ, அல்லது வேறு எந்தப்போராளிக் குழுக்களையோ இந்தியாவில் அனுமதிக்கக்கூடாது என்ற உறுதிமொழியை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்கு திரு. பேர்னாட் முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

இலங்கைப் பிரச்சனையில் இந்தியா தலையிடக்கூடாது, இந்தியாவில், இலங்கைப் போராளிகளுக்கு தளவசதி அமைக்க அனுமதிக்கக்கூடாது என்ற இரண்டு விடயங்களிலும், இந்திய அரசு, மறைமுக உதவி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆயினும், அதேவேளையில் இலங்கைப் பிரச்சனையில் வேறு எந்த நாடும் தலையீடு செய்வதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது என்றும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை பாகிஸ்தானிடமிருந்து உதவி கோரியுள்ளது என தான் நம்புவதாக எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி கூறியுள்ளது இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

திரு. பேர்னாட் திலகரத்னவின் புதுடில்லி பேச்சுவார்த்தைகளின்போது, இலங்கைப் பிரச்னை கையாளப்பட்டவிதம் குறித்து, இரு தரப்பினர்க்கிடையே கருத்து வேற்றுமைகள் எழுந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

தமிழீழப் புலிகளுடன், அரசு நடந்துகொண்டவிதம் குறித்தும், வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு தன்னாட்சிவழங்கும் விடயத்திலும், இலங்கை அரசு இராணுவ ரீதியிலான தீர்வு காணவே முயலுகிறது என்ற உண்மை புலப்படுத்தப்பட்டது என்றும், இத்தகைய நிலை தவறானது என்பதை இலங்கை அரசு ஏற்று, மாற்று நடவடிக்கைகளுக்கு முயலாத பட்சத்தில் தமிழ் மாநிலமான தமிழ்நாட்டில் இக்கட்டான சூழ்நிலை உருவாகும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இப்பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடிய ஒரே ஒரு வழியான "புலிகளுடன் பேச்சுவார்த்தை" நடத்துவதுபற்றி பேசப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தச்சண்டையை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தொடர்ந்து நெருக்கடி கொடுத்துவருவது இந்திய அரசுக்கு மேலும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தில் தொடர்ந்து இந்த சண்டை நீடித்து நடந்தால் பல லட்சக்கணக்கான இலங்கை அகதிகள் இந்தியாவுக்குள் நுழைவது தவிர்க்க முடியாதது என்றும் இந்திய அரசு கவலைகொண்டுள்ளது.

எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இலங்கை அரசு இந்திய அரசசை சமாதானப்படுத்தி தனது காரியத்தைச் சாதிக்கவும், அதேவேளையில் இந்திய அரசு தனது பிடியை விட்டுக்கொடுக்காமல் மறைமுகமாக தான் என்ன நினைக்கிறதோ அதனைச் சாதுரியமாகச் சாதிக்க முயலுவதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். (அ)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## யாழ். கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி பெற்றிருப்பதாகவும், அரசுக்கும் தங்களுக்கும் வானொலி தொடர்பு சேவை இருந்துவருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

கோட்டைக்குள் புலிகளின் தாக்குதலினால் சகல கட்டடங்களும் தரைமட்டமானலும் காயங்களுடன் வாழ பயிற்சி பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளாராம்.

## படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துழைப்போம் என்று கூறினோம்.

சிங்கள அரசானது படையினருக்கு வைத்தியம் என்ற பெயரில்ஆயுதங்களை கொண்டு வருவதைத் தடுக்கும் முகமாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவர்களைப் பொறுப்பேற்று தரைப்பாதை வழியாகபலாலி முகாமுக்கு எடுத்துச்செல்ல நாம் இணங்கினோம். ஆனால் இதுவரை ஸ்ரீலங்கா அரசு அதற்கு இணங்கவில்லை.

## படையினர்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சென்னை வானொலி மாலை 6-30: "யாழ். கோட்டைக்குள் ஹெலிகப்டர் ஒன்று இன்று அதிகாலை இறங்கி உள்ளே காயமடைந்திருந்த 17 படைவீரர்களில் எட்டுப் பேரை மீட்டுள்ளது. "ஒரு ஹெலிக்கப்டர் கோட்டைக்குள் இறங்கியபோது மற்ற ஹெலிக்கப்டர்களும், ஜெட் விமானங்களும் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பறந்து மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிக்கப்டருக்கு பாதுகாப்பு அளித்தன."

பி. பி. ஸி. இரவு 9-00 மணிச் செய்தி: -

"இலங்கையின் வடபுலத்தில் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த யாழ். கோட்டையிலிருந்து எட்டுப் படைவீரர்களை மீட்டுள்ளதாக விமானப்படை அதிகாரி தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களை வெளியேற்றி கோட்டைக்குள் எஞ்சியிருக்கும் இராணுவத்தினருக்கு உணவும், மருந்தும் வழங்க ஹெலி ஒன்று கோட்டைக்குள் இறங்கியது. கோட்டைக்குள் ஹெலிக்கப்டர் இறங்கிக்கொண்டிருந்தபோது நான்கு விமானங்கள் கோட்டைப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. புலிகள் துப்பாக்கிச் வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டிருந்ததாகவும், இரண்டாவது ஹெலி திரும்ப வேண்டி நேரிட்டதாகவும் கூறப்படுகிறது. கோட்டைக்குள்ளிருந்து காயமடைந்த எட்டு இராணுவ, பொலிஸார் அப்புறப்படுத்தப்பட்டு காயமடைந்த ஏனைய ஆட்களுக்கு அந்த இடத்திலேயே சிகிச்சை வழங்கப்பட்டு, அவர்கள் கோட்டைக்குள் இருப்பதாகவும் விமானப்படை கூறுகிறது. மேலும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவ வைத்தியர் ஒருவர் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.180-க்கும் அதிகமானவர்கள் இன்னும் கோட்டைக்குள் இருக்கின்றனர். பல வாரங்களுக்கு நீடிக்கக்கூடிய போதியளவு உணவு, மருந்து வகைகள் தற்போது இவர்களிடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது கோட்டைக்குள் தண்ணீர் விநியோகம் இன்னும் இருப்பதாகவும் விமானப் படை அதிகாரி கூறியுள்ளார். முன்னர் இவ்விநியோகம் துண்டிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது இந்த நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இன்னமும் கருத்துக்கள் வெளியிடப்படவில்லை. கடந்த மூன்று வாரங்களாக கோரத்தனமான குண்டுவீச்சுக்களினால் பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான கடைகளும், வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளபோதும், புலிகளின் காப்பரண்கள் இன்னமும் அப்படியே இருப்பதாகவும் புலிகள் சார்பில் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உதைபந்தாட்டம்:

## இத்தாலி தோல்வி!

(ரோம்)

தற்போதைய உலகச் சாம்பியனான ஆர்ஜன்ரீனா, 14-வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிஆட்டத்தில் விளையாடத் தெரிவாகியுள்ளது

நேற்றுமுன்தினம், இத்தாலிக்கும் – ஆர்ஜன்ரீனாவுக்குமிடையில் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில், ஆர்ஜன்ரீனா 4-2 கோல்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது.

இக்கோஷ்டி, ஆட்ட முடிவில் நடைபெற்ற 'பெனால்டி' முறையிலான உதையிலேயே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## மட்டக்களப்பில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புகுந்துள்ளனர்.

இங்கு உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அகதிகளாக உள்ளவர்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

கொழும்பில் இருந்து 8 லொறிகளில் அனுப்பிவைக்கப்பட்ட உணவுப் பொருள்கள், 14 ஆயிரம் அகதிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டதாகவும் ஏனையோருக்கு மேலும் உணவுப் பொருள் வழங்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (து)

## ஜன நெரிசலில் 1,426 ஹஜ் யாத்திரீகர் பலி!

(மக்கா)

புனித மக்கா நகருக்கு அருகே சுரங்கப் பாதையில் ஏற்பட்ட ஜன நெரிசலில் மூச்சுத் திணறியும், மிதிபட்டும் 1,426 ஹஜ் யாத்திரீகர்கள் இறந்துள்ளார்கள் என்று சவூதி அரேபியா அறிவித்துள்ளது. (அ)

## உலக நாடுகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுப்பாட்டை பாதிப்பிற்குள்ளாகாத ஏனைய மக்கள் எதிர்நோக்கி உள்ளனர். இந்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும், உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வருவதாகவும் அறிக்கைகளை விடுத்துவரும்அரசு யுத்தத்தை தொடங்கிய பின்னர் உணவு, மருந்து, எரிபொருள்கள் உட்பட எந்தப் பொருட்களையும் தமிழ்ப் பகுதிக்கு அனுப்பி வைக்காதது மட்டுமல்ல தனியார் கூட எந்தப்பொருட்களையும் எடுத்துச் செல்ல விடாமல் தடுத்து வருகிறது.

தாக்குதல்களினாலும் பட்டினியாலும் மருத்துவ வசதி இன்மையாலும் தினம் தினம் செத்துமடிந்து கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை மட்டும் செய்யாதது மட்டுமன்று செய்ய விடாமலும் தடுத்தும் வருகின்றது ஸ்ரீலங்கா அரசு.

உலக நாடுகளோ, மனித நல அமைப்புகளோ சுகாதார நல நிறுவனங்களோபாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் உதவிகளை ஸ்ரீலங்கா அரசு மூலம் வழங்கினால் அந்த உதவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. மக்களைப் பாதிப்பிற்குட்படுத்திவரும் சக்திகளுக்கே அந்த உதவி போய்ச் சேர்ந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org